மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருக்கழுக்குன்றம்

அ.வ.எண். 5/2018

PW 1

இந்த நீதிமன்றத்து எழுத்தர் திரு.M.மோகன்ராஜ் என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பில் சாட்சிகளின் வாக்குமுலம் 1873 ம் ஆண்டின் 10 வது சட்டத்தின் வரைமுறைகளுக்குட்பட்டு 2026 ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ம் தேதி பதிவு செய்யப்பட்டது.

பெயர் : செல்வி. அம்சதேவி

தந்தை /கணவர் பெயர் : திரு. மூர்த்தி

வயது :

தொழில் :

இனம் :

கிராமம் :

முதல் விசாரணை

சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் இவ்வழக்கில் வாதியாவேன். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமுலத்தையே எனது முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ளுமாறு பிரார்த்திக்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடைய கையொப்பம் தான். கீழ்கண்ட ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய கோருகிறேன்.

1) 11.06.1987 தேதியிட்ட கிரைய ஆவணம் ஆவண எண். 1171/1987 சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 28.03.1988 தேதியிட்ட கிரைய பத்திரம் பத்திர எண் 599/1988 அசல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 19.06.1990 தேதியிட்ட கிரைய ஆவணம் ஆவண எண். 1177/1990 அசல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 05.07.2007 தேதியிட்ட கிரைய ஆவணம் ஆவண எண் 5627/2007 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) 05.07.2007 தேதியிட்ட கிரைய ஆவணம் ஆவண எண் 5628/2007 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) 14.03.2011 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் ஆவணம் ஆவண எண் 1062/2011 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) 07.12.2011 தேதியிட்ட அம்சதேவி என்பவரின் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது அசல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8) அம்சதேவி என்பவரின் பெயரில் உள்ள மின் கட்டண அட்டை அசல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9) 22.01.2017 தேதியிட்ட மூர்த்தி என்பவரின் பெயரில் உள்ள பட்டா பட்டா எண் 728 கணினி நகல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியால் சொல்லப்பட்டு தட்டச்சரால் நீதிமன்றத்தில் செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரியென்று ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

(Sd) S.Vineeth,
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர், திருக்கழுக்குன்றம்